## இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

## அசல் வழக்கு எண். 252/2018

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆர். ஜனனி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணன் | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 30.10.2023

**D.W. : 1**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தங்கச்சி கணவர் ரெத்தினம் என்பவரும் 3 ம் பிரதிவாதி ஜெயக்குமார் என்பவரும் 17.02.2012 ம் தேதியன்று ஒரு கிரைய ஒப்பந்தம் செய்தது பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தம் எவ்வளவு தொகைக்கு செய்யப்பட்டது என்றால் அந்த ஒப்பந்தம் என்னிடம் தான் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தமானது தொகை ரூபாய்.8,80,000/-க்கு போடப்பட்டது. அந்த கிரைய ஒப்பந்தத்தில் உள்ள சொத்து விவரமானது தாவா சொத்தில் உள்ள சொத்துவிவரம் தான் என்றால் சரிதான். 17.02.2012 ல் செய்த கிரைய ஒப்பந்தத்தின்படி கிரையம் செய்து கொள்ளப்பட்டதா என்றால் அந்த கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு விட்டது. அந்த கிரைய ஒப்பந்தம் எப்போது ரத்து

செய்யப்பட்டது என்றால் 2014ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் அந்த கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. என்ன காரணத்திற்காக அந்த கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது என்றால் அந்த நிலத்தை எனக்கு விற்பதாக கூறினார்கள். ஆனால் வாதிகள் 1, 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் நிலத்தை கிரையத்திற்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று என்னிடம் சொன்னார்கள். அந்த நேரத்தில் எனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் என்னால் கிரையம் செய்ய இயலவில்லை. 6 மாதம் கழித்து பின்னர் ஜெயக்குமாரிடம் இருந்து கிரையம் பெற்றேன். அந்த சொத்தானது 2ம் பிரதிவாதியின் பெயரில் 2014ம் வருடம் கிரையம் செய்யப்பட்டது. 2012ல் செய்த கிரைய ஒப்பந்தத்திலும் மற்றும் 2014ல் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்த இரு ஆவணத்திலும் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் ஒரே நபர்கள் தான் என்றால் சரிதான். தாவா சொத்தில் 2வது வாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் இருந்து 2வது வாதியை காலி செய்யக் கோரி ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அந்த வழக்கானது தற்போது தொட்டியம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. நான் கிரையம் செய்த நிலத்தை 2வது வாதியை காலி செய்ய சொல்லி நான் நேரடியாகவோ அல்லது வேறு வகையிலோ கேட்டேனா என்றால் நிலம் வாங்கியவரிடம் காலி செய்து கொடுக்குமாறு சொன்னேன். நிலத்தை விற்றவர் அம்மா அந்த இடத்தில் குடியிருந்து வருவதால் அவர் 6 மாத கால அவகாசம் கேட்டார். தற்போது வரை வாதிகள் தான் குடியிருந்து வருகிறார் என்று சொன்னாலும் நான் அவர்களை காலி செய்ய சொல்லி ஆட்களை வைத்து மிரட்டினேன் என்று சொன்னால் சரியல்ல.

**(வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக கால அவகாசம் வழங்கப்பட்டது).**